ஓம் முருகா எண்டர்பிரைசஸ்
98402 56855, 98408 56777, 044-26722222


Improve Your Handwriting with In 7 Days
FREE DRAWING COMPETITION ON 10 & 11-03-2012
Roots to Shine Kids
ADMISSION OPEN FOR 2012 - 2013
PLAY SCHOOL & PRE SCHOOL 28543217





# ரயிலே, ரயிலே






# சுவாரசியம் மிகுந்த சென்னை ரயில் மியூசியம்

- எல்.முருகராஜ் -

நமக்கு நெருக்கமான, பிரியமான விஷயத்தில் ரயில் நிச்சயம் இடம் பெற்றிருக்கும்.

எத்தனை முறை பார்த்தாலும், எத்தனை முறை பயணம் செய்தாலும், எந்த வயதிலும் களைப்பிற்கு பதிலாக களிப்பே தரும் ரயிலின் வரலாறுதான் எத்தனை சுவாரசியமானது.

150 வருட இந்திய ரயில்வேயின் வரலாறை சொல்லும் சென்னை, புது ஆவடி ரோட்டில் உள்ள மண்டல ரயில் அருங்காட்சியகம், அவசியம் அனைவரும் காண வேண்டிய ஒன்றாகும்.

MULTIMEDIA
WEB DESIGNING
500 Vacancies
+2 To Any Degree
SUN COMPUTERS
9380874295 / 044-25583948

1853-ம் வருடம் மும்பையில் இருந்து தானேக்கு (34 கி.மீ..) முதல் முறையாக ரயில் ஓடியது முதல், இன்றைக்கு வரையிலான வரலாறை அருங்காட்சியகத்தில் உள்ள படங்களும், ரயில் பெட்டிகளும், இன்ஜின்களும் படிப்படியாக விளக்குகின்றன எப்படி தகடாக இருந்து முழு ரயில் உருவாகிறது என்பதை சொல்வதில் துவங்கி, ரயில் இன்ஜினை நிலம் உழுவதற்காக பயன்படுத்தியதும், அந்தக்கால ராஜாக்கள் மற்றும் செல்வந்தர்கள் ஆங்காங்கே ரயில் போக்குவரத்து நடத்தியதும், பல ஆண்டுகளுக்கு முன்பே மாடி ரயில் விட்டதும் என, பல விஷயங்கள் இங்கே போனால் தெரிந்து கொள்ளலாம்,

48 வகையான நிஜமான ரயில் இன்ஜின் பெட்டிகள், கிரேன்கள் இங்கு உள்ளன. இப்போது இவை செயல்பாட்டில் இல்லாவிட்டாலும், எப்படியெல்லாம் செயல்பட்டன என்பதை அறியும் போது வியக்காமல் இருக்கமுடியாது. அதிலும், நீராவி இன்ஜின் ரயிலை நெருப்பில் வெந்தபடி ஓட்டிய ஓட்டுனர்கள், உண்மையிலேயே பெரும் தியாகிகள் என்றே சொல்லத் தோன்றும்.

இப்போது பர்ஸ்ட் கிளாஸ் துவங்கி ஸ்லீப்பர் கிளாஸ் வரை தெரியும். ஆனால், அப்போது மூன்றாம் வகுப்பு பெட்டி என்று ஒன்று இருந்ததும், அதில் எளியவர்கள் மற்றும் ஏழைகள் உட்கார்ந்தே பயணித்ததும், அந்த பெட்டியில்தான் இந்தியா முழுவதும் மகாத்மா காந்தி விரும்பி பயணித்தது போன்ற விவரங்களை, போட்டோ கேலரி விளக்குகிறது.



பரந்து விரிந்த பசுமையான பரப்பில் நீராவி இன்ஜின் முதல் ஊட்டி மலை ரயில் வரையிலான கோச்சுகள் புது வண்ணம் பூசி நிற்கின்றன. அதிலும் ஊட்டி மலை ரயில் பல் சக்கரத்தை பிடித்தபடி எப்படி மலையேறுகிறது என்பதை, இங்கே போனால் புரிந்து கொள்ளலாம்.

குழந்தைகளை குஷிப்படுத்த ஜாய் டிரெய்ன் உள்ளது. டார்ஜிலிங் ரயில் இன்ஜின் உள்ளிட்ட இன்ஜின்கள், கோச்சுகளை பார்த்தபடி, சுரங்கத்தினுள் நுழைந்தபடி 500 மீட்டர் துாரம் ரயிலில் குஷியாக பயணிக்கலாம். பயணத்தின் ஆரம்பத்தில் குழந்தைகளாக இருப்பவர்கள், பயண முடிவில் குழந்தைகளாக மாறிவிடுவர்.

இதே போல மாடல் ரயில்கள் ஓடுகின்றன. சிக்னல் செயல்படும் விதம் குறித்து, மாதிரி மின்சார ரயில்களை ஓடவிட்டுகாட்டுகின்றனர். இது அருமையாக உள்ளது. பாரம்பரிய பொருட்கள் கூடத்தில் 134 வருடத்திற்கு முந்தைய கடிகாரம், இன்னமும்துல்லிய மாக நேரம் காட்டியபடி ஓடிக்கொண்டு இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

குழந்தைகள் விளையாட இரண்டு மைதானங்கள் உள்ளன. நீங்களே சாப்பாடு கொண்டு வந்து, குடும்பத்தோடு சாப்பிடுவதே ஒரு சந்தோஷமான அனுபவம்தான்.

கடந்த 2002ம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த ரயில் மியூசியம், இந்தியாவில் ஐந்தாவதாக விளங்குகிறது. இதனை முதன்மையான மியூசியமாக்கும் முயற்சியில், கியூரேட்டர் வி.கல்யாண சுந்தரம் தலைமையிலான ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் கொஞ்ச நாளில், இங்கே நிறைய மாற்றங்கள் வர உள்ளன. வரும் பார்வையாளர்களுக்கு தேவையான வசதிகளும் நிறைய செய்து கொடுக்கப்படும். அப்புறம் பாருங்க, இந்த மியூசியத்திற்கு திரும்பத் திரும்ப வருவீங்க, என்கின்றனர் நம்பிக்கையுடன்.


தண்டவாளத்தின் ஸ்லீப்பர் கட்டைகள் ஏன் வளைந்து காணப்படுகின்றன? முன்பெல்லாம் ஓடும் ரயிலில் இருந்தபடியே ஒரு வளையத்தை ஓட்டுனர்கள் லாவகமாக வாங்குவார்களே அது என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு, இங்கே வழிகாட்டியாக வரும் ஊழியர்கள், தெளிவான விளக்கம் தருகிறார்கள்.

நீங்கள் காது கொடுத்து கேட்பீர்கள் என்றால், போர்காட் என்ற வெளிநாட்டு பெண்தான் இந்தியாவின் முதல் ரயில் தண்டவாளத்தை உருவாக்கினார் என்பதும், இரவில் ஸ்டேஷனில் வந்து நிற்கும் ரயிலின் ஜன்னல், ஜன்னலாய் நிலைய பணியாளர் ஒருவர் லாந்தர் விளக்கை பிடித்தபடி, நிலையத்தின் பெயரை உரக்கக் கூவியபடியே செல்வார் என்பது போன்ற பழங்காலசுவாரசியமான கதைகள் சொல்வர்.

WEB DESIGNING
வெப் டிசைனிங் செய்ய
9380874295
www.suncomputerinfotech.com
info@suncomputerinfotech.com
044-25583948

**வாரத்தில் திங்கள் கிழமை விடுமுறை. மற்ற நாட்களில் காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை மியூசியம் திறந்து இருக்கும். அனுமதி கட்டணம் 10 ரூபாய். மேலும் விவரங்களுக்கு போன் எண்: 044-26201014.**

OM MURUGA ENTERPRISES
உங்கள் வீடு, பெரிய கட்டிடங்கள், பிளாட் கட்டுவதற்கு தேவையான சென்டரிங்க் சீட், பலகை, ஆக்ராஸ்பேன், பிராப்ஸ், காலம்பாக்ஸ் மற்றும் ஸ்கஃபோல்டிங் நியாயமான வாடகையில் குறித்த நேரத்தில் கிடைக்கும்.




தலைமை அலுவலகம்
# 3/32,பார்த்தசாரதி ரெட்டி தெரு, (G.T.C.வங்கி பின்புறம்) M.R.நகர், கொடுங்கையூர்,சென்னை-118
www.ommurugaenterprises.com
ommurugaenterprisess@gmail.com

கிளை அலுவலகங்கள்
No:1,கொளப்பாக்கம் மெயின் ரோடு, கொளப்பாக்கம்,செ-122 (போரூர் பாய்கடை to கொளப்பாக்கம்)
2004, KKLS காம்ப்ளக்ஸ், பைபாஸ் ரோடு, ரெட்ஹில்ஸ், லட்சுமி திரையரங்கம் அருகில், சென்னை-52.

044 - 26722222,044-23821392,044-26323529

Chennai
VELU MILITARY
• Chettinadu • Tandoori • Indian • Chinese
Plot No. 4897, AA-145, First Floor, 3rd Avenue, Anna Nagar, Ch-40
• MEALS
• BIRIYANI
• CHICKEN
• MUTTON
• SEA FOOD
• SPECIAL DELIGHTS
• EVENING SPECIAL
Special Offer
Unlimited Non - Veg Meals
(White Rice, Chicken Gravy, Mutton Gravy, Fish Gravy, Sambar, Rasam, Koottu, Porial & Butter Milk)
₹79.00 Only
Parcel Meals Rs. 89.00
Home Delivery
26201911
Minimum order Rs. 350/- (within 2 km radius)
Timings : 11.30 - 3.30 p.m. & 6.30 - 11.00 p.m.
BRIYANI-BULK / PARTY ORDERS
CHICKEN BRIYANI
1 KG RICE with 1½ KG Chicken
Rs. 850/- Per Kg
MUTTON BRIYANI
1 KG RICE with 1½ KG MUTTON
Rs. 1100/- Per Kg
Book Your Orders Before 9 a.m.
Delivery Charges Extra

தினமலர்
அக்கம் பக்கம்
அண்ணாநகர் | ஆவடி | முகப்பேர் | கோயம்பேடு | வில்லிவாக்கம்
சென்னை, மார்ச். 24, 2012.



தக்கோலம் (55 Km From Chennai)
மிக அழகான, பிரம்மாண்டமான வீட்டுமனைகள்
அதிரடி விற்பனையில், அனைத்து வசதிகளும் உள்ளன.
• பேருந்து நிலையம் • ரயில்நிலையம் • மருத்துவமனை
• அரசு மற்றும் தனியார் மேல்நிலைப்பள்ளி • கல்லூரிகள்
• 28 கி.மீ. தொலைவில் கிரீன்பீல்டு ஏர்போர்ட்
பத்திரப்பதிவு இலவசம்
பத்திரபதிவு செய்யும் முதல் 50 நபர்களுக்கு 2 கிராம் தங்க நாணயம் பரிசு
1 சதுரடி ₹100/- இன்னும் பல சலுகைகளுடன்
AKJ PROMOTERS
47/A, சாவித்ரி ஃப்ளாட்ஸ், கிரவுன்ட் ப்ளோர்,
கங்கை அம்மன் கோவில் தெரு,
விருகம்பாக்கம், சென்னை – 600 092.
உடனே அணுகவும்: 8438107511, 8438107512

# ரயிலே, ரயிலே சுவாரசியம் மிகுந்த சென்னை ரயில் மியூசியம்

- எல்.முருகராஜ் -

நமக்கு நெருக்கமான, பிரியமான விஷயத்தில் ரயில் நிச்சயம் இடம் பெற்றிருக்கும்.


எத்தனை முறை பார்த்தாலும், எத்தனை முறை பயணம் செய்தாலும்,எந்த வயதிலும் களைப்பிற்கு பதிலாக களிப்பே தரும் ரயிலின் வரலாறுதான் எத்தனை சுவாரசியமானது.

150 வருட இந்திய ரயில்வேயின் வரலாறை சொல்லும் சென்னை, புது ஆவடி ரோட்டில் உள்ள மண்டல ரயில் அருங்காட்சியகம், அவசியம் அனைவரும் காண வேண்டிய ஒன்றாகும். 1853-ம் வருடம் மும்பையில் இருந்து தானேக்கு (34 கி.மீ.,) முதல் முறையாக ரயில் ஓடியது முதல், இன்றைக்கு வரையிலான வரலாறை அருங்காட்சியகத்தில் உள்ள படங்களும், ரயில் பெட்டிகளும், இன்ஜின்களும் படிப்படியாக விளக்குகின்றன.

எப்படி தகடாக இருந்து முழு ரயில் உருவாகிறது என்பதை சொல்வதில் துவங்கி, ரயில் இன்ஜினை நிலம் உழுவதற்காக பயன்படுத்தியதும், அந்தக்கால ராஜாக்கள் மற்றும் செல்வந்தர்கள் ஆங்காங்கே ரயில் போக்குவரத்து நடத்தியதும், பல ஆண்டுகளுக்கு முன்பே மாடி ரயில் விட்டதும் என, பல விஷயங்கள் இங்கே போனால் தெரிந்து கொள்ளலாம்.

48 வகையான நிஜமான ரயில் இன்ஜின் பெட்டிகள், கிரேன்கள் இங்கு உள்ளன. இப்போது இவை செயல்பாட்டில் இல்லாவிட்டாலும், எப்படியெல்லாம் செயல்பட்டன என்பதை அறியும் போது வியக்காமல் இருக்கமுடியாது. அதிலும், நீராவி இன்ஜின் ரயிலை நெருப்பில் வெந்தபடி ஓட்டிய ஓட்டுனர்கள், உள்ளபடியே பெரும் தியாகிகள் என்றே சொல்லத் தோன்றும்.

இப்போது பர்ஸ்ட் கிளாஸ் துவங்கி ஸ்லீப்பர் கிளாஸ் வரை தெரியும். ஆனால், அப்போது மூன்றாம் வகுப்பு




பெட்டி என்று ஒன்று இருந்ததும், அதில் எளியவர்கள் மற்றும் ஏழைகள் உட்கார்ந்தே பயணித்ததும், அந்த பெட்டியில்தான் இந்தியா முழுவதும் மகாத்மாகாந்தி விரும்பி பயணித்தது போன்ற விவரங்களை, போட்டோ கேலரி விளக்குகிறது.

பரந்து விரிந்த பசுமையான பரப்பில் நீராவி இன்ஜின் முதல் ஊட்டி மலை ரயில் வரையிலான கோச்சுகள் புது வண்ணம் பூசி நிற்கின்றன. அதிலும் ஊட்டி மலை ரயில் பல் சக்கரத்தை பிடித்தபடி எப்படி மலையேறுகிறது என்பதை, இங்கே போனால் புரிந்து கொள்ளலாம்.

குழந்தைகளை குஷிப்படுத்த ஜாய் டிரெய்ன் உள்ளது. டார்ஜிலிங் ரயில் இன்ஜின் உள்ளிட்ட இன்ஜின்கள், கோச்சுகளை பார்த்தபடி, சுரங்கத்தினுள் நுழைந்தபடி 500 மீட்டர் துாரம் ரயிலில் குஷியாக பயணிக்கலாம். பயணத்தின் ஆரம்பத்தில் குழந்தைகளாக இருப்பவர்கள், பயண முடிவில் குழந்தைகளாக மாறிவிடுவர்.

EAST MUGAPPAIR
4/26 Pachayappan Salai, Ch-37
1300 Sq.ft. 2 BHK, GF, CCP,
Independent House
Metro Water, 3 Phase
Wood Work, Rent, Near IOB Bank
Near Velammal, Spartan School
Call: 9551364248

இதே போல மாடல் ரயில்கள் ஓடுகின்றன. சிக்னல் செயல்படும் விதம் குறித்து, மாதிரி மின்சார ரயில்களை ஓடவிட்டு காட்டுகின்றனர். இது அருமையாக உள்ளது. பாரம்பரிய பொருட்கள் கூடத்தில் 134 வருடத்திற்கு முந்தைய கடிகாரம், இன்னமும் துல்லியமாக நேரம் காட்டியபடி ஓடிக்கொண்டு இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. குழந்தைகள் விளையாட இரண்டு மைதானங்கள் உள்ளன. நீங்களே சாப்பாடு கொண்டு வந்து, குடும்பத்தோடு சாப்பிடுவதே ஒரு சந்தோஷமான அனுபவம்தான்.

கடந்த 2002ம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த ரயில் மியூசியம், இந்தியாவில் ஐந்தாவதாக விளங்குகிறது. இதனை முதன்மையான மியூசியமாக்கும் முயற்சியில், கியூரேட்டர் வி.கல்யாண சுந்தரம் தலைமையிலான ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இன்னும் கொஞ்ச நாளில், இங்கே நிறைய மாற்றங்கள் வர உள்ளன. வரும் பார்வையாளர்களுக்கு தேவையான வசதிகளும் நிறைய செய்து கொடுக்கப்படும். அப்புறம் பாருங்க, இந்த மியூசியத்திற்கு திரும்பத் திரும்ப வருவீங்க, என்கின்றனர் நம்பிக்கையுடன்.

தண்டவாளத்தின் ஸ்லீப்பர் கட்டைகள் ஏன் வளைந்து காணப்படுகின்றன? முன்பெல்லாம் ஓடும் ரயிலில் இருந்தபடியே ஒரு வளையத்தை ஓட்டுனர்கள் லாவகமாக வாங்குவார்களே அது என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு, இங்கே வழிகாட்டியாக வரும் ஊழியர்கள், தெளிவான விளக்கம் தருகிறார்கள். நீங்கள் காது கொடுத்து கேட்பீர்கள் என்றால், போர் காட் என்ற வெளிநாட்டு பெண்தான் இந்தியாவின் முதல் ரயில் தண்டவாளத்தை உருவாக்கினார் என்பதும், இரவில் ஸ்டேஷனில் வந்து நிற்கும் ரயிலின் ஜன்னல், ஜன்னலாய் நிலைய பணியாளர் ஒருவர் லாந்தர் விளக்கை பிடித்தபடி, நிலையத்தின் பெயரை உரக்கக் கூவியபடியே செல்வார் என்பது போன்ற பழங்கால சுவாரசியமான கதைகள் சொல்வர்.

**வாரத்தில் திங்கள் கிழமை விடுமுறை. மற்ற நாட்களில் காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை மியூசியம் திறந்து இருக்கும். அனுமதி கட்டணம் 10 ரூபாய். மேலும் விவரங்களுக்கு போன் எண்: 044-26201014.**











